# விவசாயியும் நானே வியாபாரியும் நானே



நான் ஜெயராமன் 37 வயது, விவசாய குடும்பத்தில் பிறந்தவன். 5ம் வகுப்பு வரை மட்டுமே படித்துள்ளேன். எனக்கு 2 ஆண் மகன்களும் 1 பெண் குழந்தையும் உள்ளது. 2 ஏக்கர் புன்செய் நிலத்தில் வெற்றிலை சாகுபடி செய்து வருகிறேன்.

நான் சிறு வயதாக இருக்கும் போது இந்த இராஜகிரி வெள்ளைக் கொடி வெற்றிலையை எனது தந்தை பயிர் செய்து வந்தார். அதனை அருகில் உள்ள இராஜகிரி மார்கெட் ஏலத்திற்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து சொற்ப லாபம் கிடைத்தது. இதில் எங்கள் குடும்பம் பெரிய நிலைக்கு வரவில்லை. இதனையெல்லாம் பார்த்த நான் விவசாயியாக மட்டும் இல்லாமல் வியாபாரியாக மாறினால் கூடுதலாக லாபம் கிடைக்கும் என்ற நோக்கத்தோடு நானே மற்ற விவசாயிகளிடமிருந்து வாங்கி கும்பகோணம் சில்லரை கடைகளுக்காக அனுப்பி வைப்பேன். கும்பகோணம் மார்க்கெட்டில் தரைக்கடை ஏலம் எடுத்து எங்களது வெற்றிலையை நேரிடையாக பொது மக்களுக்கு விற்பனையும் செய்து வருகிறேன்.

இந்த நிலையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கும்பகோணம் மார்கெட் அனாலிஸ்ட் மூலம் தினசரி விலை நிலவரங்களை தெரிந்து கொள்ளும் சேவையை பற்றி அறிந்து கொண்டேன். ஆனால் ஏனோ நான் இன்று வரை எனது செல் நம்பரை பதிவு செய்ய வில்லை. என்னிடம் தினசரி வெற்றிலை விலை நிலவரங்களை கேட்டு தெரிந்து செல்வார்.

இதன் பிறகு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மூலம் என்னை மதித்து எனது பெயரை வியாபாரிகள் பெயரில் ஒருவராக என்னை சேர்த்திருக்கிறார்கள்.

இதனால் பல ஊர்களில் இருந்து எனக்கு போன் கால்கள் வந்த வண்ணம் இருக்கிறது. வெற்றிலையை விற்பனை செய்தும் வருகிறேன். எனக்கு இந்த மாதிரியான புதிய தொடர்புகள்

இந்த டி.எம்.ஐ சேவை மூலம் கிடைத்தது. சமீப காலமாக என்னுடைய விற்பனை அதிகரித்திருப்பது கண்கூடாகவே தெரிகிறது.

இந்த சேவையின் முக்கியத்துவும் தெரிந்து கொண்டு எனது செல் நம்பர் மற்றும் என்னுடைய அருகில் உள்ள வெற்றிலை விவசாயிகள் செல் நம்பரை பதிவு செய்துள்ளோம்.

கண்ணுக்கு தெரியாமல் இந்த உதவியை செய்தாலும் லாபம் கண்கூடாக தெரிகிறது. என்னுடைய 15 வருட உழைப்பிற்கு எனக்கு கிடைத்த அங்கீகாரமாக இதனை நினைக்கிறேன். நன்றி.

திரு. க. ஜெயராமன்,

த/பெ. கலியபெருமாள்,

பாரதி நகர், நாயக்கர் பேட்டை,

இளங்கார்குடி அஞ்சல்,

பாபநாசம் தாலுக்கா,தஞ்சாவூர் மாவட்டம்,

அலைபேசி: 09344599252